## வெலிகம பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 24 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 20 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெலிகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசுப் பாய்ச்சல் கூற்றும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது கொள்வனவு செய்திருந்த மற்றும் நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 4,694,691 பெறுமதியான காணிகள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2014 ஜுலை 07 திகதி வழங்கியிருந்த ரூபா 1,000,000 இற்கான தொகை மூலதன உதவிகள் என கணக்கீடு செய்யப்படாமல் ஏனைய உதவிகள் வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) கம்புறுகமுவ வர்த்தக தொடர் கட்டிடத்தில் ஆயுள்வேத கட்டித்தை புனரமைப்பதற்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 550,000 பெறுமதியான கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 5,050,000 தொகை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் மேலதிகமாக ஏற்பாடு செய்திருந்த தொகை ரூபா 4,500,000 ஆகும்.

(ஈ) பதவியணிக் கடன் பதிவேட்டின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மிகையாக அறவிடப்பட்டிருந்த ரூபா 4,500 இற்கான தொகை பதவியணிக் கடன் கணக்கில் செலவு மீதி ஒன்று என காட்டப்படாமல் பதவியணிக் கடன் மீதியில் இருந்து கழித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) சபையை பிரதிநிதிப்படுத்துவதற்காக சமுகமளிக்கக்காத மந்திரிமார்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 22,400 இற்கான அமர்வுப் படி 2014 மார்ச் மாதத்தில் அறவிடப்பட்டு சம்பளங்கள் மற்றும் படிகள் செலவுத் தலைப்பிற்கு செலவு வைக்கப்படாமல் ஏனைய உதவிகள் 1.70 வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான சபை அங்கத்தவர்களின் எரிபொருள் செலவு ரூபா 759,000 இற்கான தொகை பிரயாணச் செலவு செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்படாமல் வழுங்கள் மற்றும் உபகரணங்கள் செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) வீதவரிப் பதிவேட்டின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீத வரி மேலதிகப் பெறுவனவு ரூபா 34,045 இற்கான தொகை வீதவரி கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு மீதி ஒன்றென காட்டப்படாமல் நிலுவை தொகையில் இருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான வீதவரி மற்றும் ஏக்கர் வரி ஆகியவற்றிற்காக அறவிடப்பட்ட மிகைக் கட்டணம் ரூபா 18,684 இற்கான தொகை ஆண்டிற்கான வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் வருமானம் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ஏனைய வருமானங்களின் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 28,924,258 தொகை எனினும் பேரேட்டின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது ரூபா 20,754,151 தொகை மாத்திரமே. அதன் பிரகாரம் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 8,170,107 ஆகும். முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த இந்த தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் வருட இறுதியில் உள்ளவாறு ஏனைய வருமானங்கள் கடன்பட்டோர் பெறுமதியாகிய ரூபா 45,235,870 இற்கான தொகையில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 37,065,763 ஆகக் காணப்பட்டது.

(ஒ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது துண்டுகளாகப் பகிரப்பட்டு விற்பனை செய்யப்பட்ட ஏல விற்பனை காணிகளில் இருந்து பொது வேலைக்களுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 24 காணித் துண்டுகளின் பெறுமதியை கணித்து நிதிக் கூற்றுக்களில் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சமர்ப்பித்திருந்த 11 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகளின் பெறுமதி ரூபா 79,282,899 ஆகக் காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு விடயங்களின் பெறுமதி ரூபா 81,021,414 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 1,738,515 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவறு 01 வருட காலத்தை மிகைத்திருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,438,467 ஆகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்திருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,545,105 ஆகும்.

(இ) தீர்க்கப்படாத கணக்குகள்

---------------------------------------------

முன்னைய ஆண்டுகள் முதல் முன் கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 3,506,889 இற்கான 06 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படாமல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

ரூபா 170,403,841 தொகை பெறுமதியான சொத்துக்கள் மற்றும் ரூபா 16,734,826 தொகை பெறுமதியான பொறுப்புக்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், நாளது வரை மற்றும் முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடுகள், முதலீட்டு பதிவேடுகள், மீதிகளை உறுதிப்படுத்தல்கள் மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) | 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக விழாச் செலவுகளுக்காக முறையே ரூபா 725,900 மற்றும் ரூபா 260,500 தொகையாக ரூபா 986,400 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக முதல் அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு பாதீட்டுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகை மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 திகதி இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரி சுற்று நிருபம் | கணனி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 30,945,594 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,051,773 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 9,057 | 2,715 | 1,044 |
| வாடகை | 3,369 | 3,294 | 1,375 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,229 | 7,423 | 543 |
| ஏனைய வருமானங்கள் | 82,020 | 80,009 | 64,897 |

2.2.2 வீத வரி

---------------

2014 ஆண்டிற்கான வீத வரி பில் போடப்பட்டவை மிகைக் கட்டணம் உட்பட ரூபா 287,546 ஆகக் காணப்பட்டதுடன் அத் தொகையிலிருந்து ஆண்டின் போது பெறுவனவுகள் ரூபா 67,521 ஆகும். இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வீத வரி அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 23 ஆகும். 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 989,990 ஆக காணப்பட்டதுடன் 2014 ஆண்டின் போது அந்த நிலுவை அறவீடுகள் ரூபா 261,943 ஆகும். இதன் பிரகாரம் நிலுவை தொகையை அறவீடு செய்யும் முன்னேற்றம் நூற்றிற்கு 26 ஆகும்.

2.2.3 ஏக்கர் வரி

-------------------

மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி, பில் போடப்பட்டவைகள் மிகைக் கட்டணம் உட்பட ரூபா 11,029 ஆகக் காணப்பட்டதுடன் அத் தொகையில் ஆண்டின் போது பெறுவனவுகள் ரூபா 584 மாத்திரம் காணப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான ஏக்கர் வரி அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றின் 5 ஆகும். 2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 100,943 ஆகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவைத் தொகையில் ஆண்டின் போது அறவிடப்பட்ட தொகை ரூபா 74 மாத்திரம் என்ற காரணமாக நிலுவைத் தொகை அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 0.02 ஆகும்.

2.2.4 குப்பை வரி

--------------------

(i) வெலிகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலா விடுதிகளில் இருந்து குப்பைகளை அகற்றுவதற்காக ஒரு சுற்றுலா விடுதியில் இருந்து ரூபா 1,000 குறைந்த அளவு வரி ஒன்று அறவீடு செய்வதற்காக 2014 திசெம்பர் 26 ஆந் திகதி சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஜனவரி மாதம் முதல் இந்த வரியினை அறவீடு செய்வதற்காக துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலும் சபையின் அதிகாரப் பிரசேத்தில் சுற்றுலா விடுகளில் இருந்து மாதாந்தம் ரூபா 1,000 மிகைத்து வரி அறவிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வரியினை தீர்மானித்த முறை வெளிப்படுத்தப்படவில்லை. அத்துடன் 2014 திசெம்பர் 31 திகதி அளவில் 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக 18 சுற்றுலா விடுதிகளில் இருந்து

ரூபா 1,047,000 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அத் தொகையை அறவீடு செய்வதற்காக 2015 ஏப்ரல் மாதம் இறுதி வரை நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பின்வருமாறு.

| | ரூபா. |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 41,951,405 |
| முத்திரைக் கட்டணம் | 2,700,000 |

2.2.6 வெலிகம, மிதீகம துருக்கி கிராமத்தில் கடைகளை வாடகைக்கு கொடுத்தல்

---

மிதீகம துருக்கி கிராம வீடமைப்பு செயற்திட்டத்தில் வர்த்தக தொடர் கட்டிடத்தில் 21 கடைகள் 2006 நவம்பர் 27 திகதி சாட்டுதல் கடிதம் ஒன்றின் மூலம் வெலிகம பிரதேச செயலாளரினால் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்தது.

(i) 2006 நவம்பர் 28 திகதி இந்த 21 கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்காக கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் கிடைத்த கேள்விப் பத்திரங்களின் பிரகாரம் 10 கடைகள் வாடகையாளருக்கு ஒப்படைக்கப்பட்டு ஒரு தரப்பு உடன்படிக்கை கையொப்பமிட்டிருந்ததுடன் 9 ஆம் மற்றும் 10 இலக்க கடை வாடகையாளரிடம் ஒரே தடவை செலுத்த வேண்டிய ரூபா 100,000 வீதம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அதனை அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ii) இந்த கடைகளை எழுத்து மூலமாக உரித்தாக்கி வாடகைக்கு கொடுக்க வேண்டும் என மாத்தறை உதவி உள்ளூராட்சி ஆணையாளரினால் 2015 மே 07 திகதிய கடிதத்தின் மூலம் சபைக்கு அறவித்திருந்த போதிலும் அது வரை இந்த கடைகளை வாடகைக்கு கொடுக்க முடியும் என பிரதேச செயலாளரினால் 2006 நவம்பர் 26 திகதிய உரித்தாக்கிய கடிதத்தின் மூலம் சபைக்கு அறிவித்திருந்தார்.

(iii) 2007 ஆண்டு முதல் பத்து கடைகளில் இருந்து முறைப்படி பில்போடப்பட்டு வாடகை அறவிடப்படாமையால் சபைக்கு நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 1,098,000 ஆகக் காணப்பட்டதுடன் மீதியான 11 கடைகளை வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 1,207,800 உட்பட 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏற்பட்டிருந்த பண நட்டத்தின் கூட்டுத்தொகை ரூபா 2,305,800 ஆகும்.

(iv) இந்தக் கடைகளுக்காக மின்சாரம் பெற்றுக்கொள்ளும் போது இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்தது சபை ஆகும். வாடகைக்கு கொடுக்கும் சந்தரப்பத்தில் குறிப்பிட்ட வாடகையாளருடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மின்சாரப் பட்டியல்கள் அவர்களினால் தீர்க்கப்பட வேண்டும் என்ற பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2013 அக்டோபர் 29 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மின்சாரப் பில் பத்திரங்களுக்காக ரூபா 63,012 இற்கான தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

(v) மேலும் சபையினால் இலங்கை மின்சார சபையுடன் மின்சாரம் பெறுவதற்காக உடன்படிக்கை மேற்கொண்டிருந்தமையால் தற்போது கோரிக்கைப் பத்திரம்

அனுப்பியிருக்கும் ரூபா 1,249,475.77 தொகையையும் சபை செலுத்துவதற்கு நேரிடக் கூடும் என அவதானிக்கப்பட்டது.

2.3 மிகை விதிப்பு

------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 06 மிகை விதிப்பு சான்றிதழ்கள் மற்றும் 02 அறிவித்தல்கள் சபையின் தலைவருக்கு மற்றும் அலுவலர்களுக்கு அனுப்பியிருந்ததுடன் அந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

----------------------------------------

3.1.1 பாதைகள் நிருவாகம்

-----------------------------------

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் வெலிகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அளவு 101.04 சதுர கி.மீற்றர்களாகும்.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 24 இன் பிரகாரம் பிரதேச சபைக்குச் சொந்தமான 153 பாதைகள் 2013 ஆகஸ்ட் 16 திகதிய இலக்கம் 1824 கொண்ட வர்த்தமானியின் மூலம் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்படாத பாதைகள் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்றன என சபையினால் அபிவிருத்தி செய்திருந்த பாதைகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான பாதைகளில் ஒவ்வொரு பாதையின் நீளம், அகலம், ஆரம்பிக்கும் இடம், முடிவடையும் இடம், தார், கொங்கிரீட் சரளைக் கற்கள் போன்ற விதமான பாதையின் தன்மையும், வீதிக் கோடு ஆகிய தகவல்கள் அடங்கும் விதமாக பாதையின் விவரப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். அவ்வாறு பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) பௌதீக திட்டமிடல், பாதைகள், காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் உபகரணச் செலவு, காணிகள், காணிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டிடங்களின் செலவுகளாக ரூபா 19,400,000 இற்கான மூலதனச் செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அங்கு பாதை அபிவிருத்திக்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2014 ஆண்டின் போது அபிவிருத்தி செய்வதற்காக பாதை பட்டோலையும் பாதீட்டுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. அவ்வாறாயினும் குறிப்பு இலக்கம் 03 இல் பாதைகள் மற்றும் மதகுகள் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்காக ரூபா 37,105,700 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

### 3.2.1 மனித வள முகாமைத்துவம்

----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| பதவியணி வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | மிகை |
|---|---|---|---|
| நிறைவேற்று | 01 | 01 | - |
| மூன்றாம் தரம் | 01 | 01 | - |
| இரண்டாம் தரம் | 26 | 29 | 03 |
| ஆரம்ப தரம் | 43 | 77 | 34 |
| ஏனைய(அமைய, தற்காலிக) | - | 06 | 06 |
| | 71 | 114 | 43 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் பதவியணிச் சம்பளங்கள் மற்றும் படிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 15,214,400 இற்கான தொகை ஒன்று மீளளிப்பு செய்திருந்ததுடன் 2014 ஆண்டிற்கான பதவியணி சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்துவதற்காக ரூபா 31,316,695 இற்கான தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 16,102,295 இற்கான மேலதிக செலவுப் பொறுப்பு ஒன்று ஏற்பட்டிருந்தது.

(ii) திறைசேரி செயலாளரின் மற்றும் நிதி அமைச்சு செயலாளரின் 2002 ஜனவரி 03 திகதிய முகாமைத்துவச் சுற்று நிருப இலக்கம் 14 இன் பிரகாரம் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரின் 2006 ஏப்ரல் 10 திகதி முகாமைத்து சேவை சுற்று நிருப இலக்கம் 28 இன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்காலிக, அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறு ஏதும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகளை உடனடியாக இடைநிறுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வெலிகம பிரதேச சபை 2014 ஆண்டின் போது ஊழியர்கள் 06 பேர் ஆட்சேர்க்கப்பட்டு சபை நிதியத்தில் இருந்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) பிரதேச சபையின் மீளாய்வாண்டிற்கான சுயமாக உருவாக்கிய வருமானம் ரூபா 62,050,158 ஆக காணப்பட்டதுடன், அவ் வருமானத்தில் ரூபா 46,319,104 இற்கான நிலுவை வருமானம் ஒன்றும் காணப்பட்டது. அதன் பிரகாரம் உண்மையாக ஆண்டின் போது அறவீடு செய்திருந்த வருமானம் ரூபா 15,731,054 ஆகும். ஆண்டிற்கான பதவியணிச் சம்பளம் மற்றும் படிகளுக்காக சபை நிதியத்தில் இருந்து மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 16,102,295 ஆக காணப்பட்டதுடன் அத் தொகை ஆண்டின் போது அறவிடப்பட்ட சுயமாக உருவாக்கிய வருமானத்தையும் மிகைத்திருந்தது.

(iv) சபையின் ஏனைய நடைமுறை செலவுகளுடன் நேரொத்த பதவியணிக் கிரயத்திற்காக சுயமாக உருவாக்கிய வருமானத்தில் நூற்றிற்கு 50.47 ஒதுக்குவதற்கு நேரிட்டுள்ளமையால் எதிர்வரும் காலத்தில் நிதி நிலைமையின் மீது தாக்கல் ஏற்படுத்தக் கூடும் என்பதனால் வருமானத்தை மேம்படுத்துதல் மற்றும் சம்பள மீளளிப்பினை முழுமையாகப் பெற்றுக் கொள்ளல் தொடர்பா கவனம் செலுத்தப்படுகின்றது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 சபைக் கூட்ட அறிக்கைகள்

-----------------------------------------------

1988 பிரதேச சபை (கூட்டங்களின் விடயங்களை நடத்துதல் தொடர்பாக செயற்பாட்டு நடைமுறை) விதியின் பிரகாரம் கூட்டங்கள் நடத்தப்படல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு.

(i) 2014 பெப்ரவரி மாதத்திற்காக பெப்ரவரி 26 திகதி மற்றும் மார்ச் 05 திகதிகளில் நடைபெற்ற பொதுக் கூட்டங்கள் அறுதி பெறுமானம் இன்மையால் கூட்டம் கூடியிருக்கவில்லை. அத்துடன் அக் காரணத்தினால் பெப்ரவரி மாதத்திற்காக சபை கூட்டம் நடாத்தியிருக்கவில்லை.

(ii) 2014 ஆண்டின் போது விஷேட பொதுக் கூட்டம் ஒன்றுடன் 13 அமர்வுகள் நடைபெற்றிருந்தன. அத்துடன் அவற்றில் 13 கூட்டங்களுக்கு இரண்டு மந்திரிமார்களே சமுகமளித்திருந்தனர். ஒரு அங்கத்தவர் 10 சபை அமர்வுகளுக்கும் இரண்டு அங்கத்தவர்கள் 7 சபை அமர்வுகளுக்கும் சமுகமளித்திருக்கவில்லை. மேலும், 05 அங்கத்தவர்கள் சபை கூட்டங்களுக்கு சமுகமளித்திருந்த போதிலும் கலந்துரையாடல் ஒன்றிலேனும் பங்குபற்றியிருக்காத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

(iii) 1988 சபையின் கூட்ட விதி (உ)(ஊ) இன் கீழ் காட்டப்பட வேண்டிய காசு தொடர்பான பிரேரணைகள் அவ் இடங்களில் குறிப்பிடப்படாமல் சபைத் தலைவர் மேற்கொள்ளும் விஷேட அறிவித்தலின் கீழ் குறிப்பிட்டு அங்கீகாரத்தை பெற்றிருந்ததுடன் சட்டத்தின் 132(ஒ) பிரிவிற்கு மாற்றமாக சபை நிதியத்தில் இருந்து செலுத்த முடியாத செலவுகளுக்காகவும் சபை பிரேரணைகளை அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

(அ) பிரதேச சபை 2014 ஆண்டிற்காக அங்கீகரித்திருந்த பாதீட்டின் பிரகாரம் வீடமைப்புச் செயற்திட்டத்திற்கு மற்றும் உடல்நல செயற்திட்டத்திற்கு மற்றும் மலகூடங்கள் நிர்மாணிப்பதற்காக நலன்பெறுவோருக்கு செலுத்துவதற்கான பணத்திற்கான மதிப்பீடு தயாரித்திருக்கவில்லை. அத்துடன் நலன்பெறுவோரின் பெயர் பட்டியலும் காட்டப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினம் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த நிதி மற்றும் செயற்பாட்டு கூற்றின் பிரகாரம் சுகாதார சேவை நிகழ்ச்சித் திட்டத்தில் உபகரண செலவுகள், காணிகள், காணிகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டிடச் செலவுத் தலைப்பிற்கு வரவு வைத்திருந்த ரூபா 7,509,547 இற்கான தொகையில் உடல்நல செயற்திட்டம் தொடர்பாக ரூபா 1,890,000 இற்கான தொகை ஒன்றும், 2014 வீடமைப்பு செயற்திட்டத்திற்காக ரூபா 5,650,000 தொகையும் என ரூபா 7,540,000 இற்கான தொகை ஒன்று வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீட்டில் அச் செயற்திட்டதிற்கான முறைப் பிரகாரம் பணம் அங்கீரித்தல் மேற்கொள்ளாமல் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அட்டுறு கொடுப்பனவு என குறிப்பிட்டு 209 செலவுத் தலைப்பிற்கு மேற்கூறிய தொகையை வரவு வைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 பாதீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மூலதன பாதீட்டு பிரேரணைகளின் கீழ் 05 சுகாதார சேவை பிரேரணைகளும், 04 பௌதீகத் திட்டமிடல் பிரேரணைகளும், 03 ஏனைய துணைச் சேவைகள் பிரேரணைகளும், 15 நலன்புரி சேவை பிரேரணைகளும், 04 சனசமூக அபிவிருத்தி பிரேரணைகளும் குறிக்கோளாக கொண்டிருந்த போதிலும் அத் திட்டங்களுக்காக எதிர்பார்த்த செலவுகள் மதிப்பிடப்பட்டு காட்டப்பட்டிருக்கவில்லை. அதே போல் இந்த குறிக்கோள்கள் சார்

திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை உறுதி செய்வதற்காக நடைமுறை ஒன்று காணப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது பாதீடு பயன்தரு நிதிக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) களஞ்சிய நிருவாகம்